பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 05 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சுற்றுலாத்துறையின் செயல்பாடுகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.
- நவீன தொழில்நுட்பத்தின்மூலம் வேளாண் நடைமுறைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
- நாட்டின் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு சேவைகள் அடுத்த மூன்றாண்டுகளில் 20 பில்லியன் டாலரை எட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கேரளாவின் வடமாவட்டங்களில் அதிகனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

▪ --இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

சுற்றுலாத்துறையின் செயல்பாடுகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி மற்றும் துறைசார்ந்த உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

இந்தியா – நெதர்லாந்து இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் பரஸ்பரம் இருநாடுகளும் இணைந்து செயல்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டு பிரதமர் திரு Dick Schoof-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உறுதியான ஆதரவு வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்த்துகளை அவரிடம் பகிர்ந்துகொண்டதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு விவரிப்பது குறித்து மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஏழு அனைத்துக்கட்சி குழுக்களுக்கு வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி எடுத்துரைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான ஆலோசனைக்கூட்டத்தில் இந்த குழுக்களில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த குழுக்கள் நாளை தொடங்கி, அடுத்த மாதம் 5-ஆம் தேதி வரை பல்வேறு நாடுகளுக்கு சென்று தீவிரவாதத்துக்கு எதிரான நிலைப்பாடு குறித்து விரிவாக எடுத்துரைக்கவுள்ளது.

<<<<<<>>>>>

அறிவியல் தொழில்நுட்பத்தின்மூலம் வேளாண் நடைமுறைகளை மேம்படுத்துவதில மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அறிவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வேளாண் உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தி செலவுகளை குறைத்தல், நீடித்த வேளாண் நடைமுறைகள் ஆகியவை வேளாண் விளைப்பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க உதவிடும் என்று அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான நாடு தழுவிய வேளாண் மேம்பாட்டிற்கான பிரச்சாரத்தில் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்க வேண்டும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நவீன தொழில்நுட்பத்தின்மூலம், நாட்டின் உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உணவு பாதுகாப்பு, பொது விநியோக முறை ஆகியவற்றுக்கான மூன்று புதிய செயலியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

உணவு தானிய கிடங்குகளில் தானிய கையிருப்பை கண்காணிக்கும் தர்பன் செயலியும், மக்கள் தங்களது குறைகள் குறித்து புகார் தெரிவிக்க ஏதுவாக, 'Anna Sahayatha' செயலியும், பொது விநியோக முறை தொடர்பான நடவடிக்கைகளுக்கு அன்ன மித்ரா செயலியும் உதவிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு சேவைகள் அடுத்த மூன்றாண்டுகளில் 20 பில்லியன் டாலரை எட்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், செயற்கைக்கோள் தொழில்நுட்பம் அடிப்படையிலான தகவல் தொழில்நுட்ப சேவைகளில் இந்தியா முன்னோடி நாடாக உருவெடுத்து வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் எம் ஆர் சீனிவாசன், வான் இயற்பியலாளர் டாக்டர் ஜெயந்த் நர்லிகர் ஆகியோரின் மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைதளத்தில் குடியரசுத் தலைவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாட்டின் அணுசக்தி மேம்பாட்டுத் திட்டத்திற்காக டாக்டர் சீனிவாசன் அளப்பரிய பங்காற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் அறிவியல் மேம்பாட்டிற்காக அவர் அளித்துள்ள பங்களிப்பிற்கு என்றென்றும் மக்களால் நினைவுகூரப்படுவார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் சீனிவாசன் எரிசக்தித்துறையில் சுயசார்பு நிலையை எட்டுவதற்கான அடித்தளம் அமைப்பதற்கு அளப்பரிய பங்காற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வான் இயற்பியலாளர் டாக்டர் ஜெயந்த் நர்லிகர் மறைவுக்கு குடியரசுத் தலைவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இளைஞர்களுக்கு அறிவியல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் அளப்பரிய பங்காற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், டாக்டர் ஜெயந்த் நர்லிகர் மறைவு அறிவியல் சமூகத்திற்கு பேரிழப்பு என்று கூறியுள்ளார்.

சாமானிய மக்களும் அறிவியல் குறித்து அறிந்துகொள்ளும் வகையில் அவரது கட்டுரைகள் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும், பெண் குழந்தைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பிரதமரின் செல்வ மகள் சேமிப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

*(வாய்ஸ் பைட் - பயனாளிகள் - 1.05 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

கேரளாவின் வட பகுதியில் உள்ள கோழிக்கோடு, வயநாடு, கன்னூர் மற்றும் ‘Kasargod மாவட்டங்களில் அதிகனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள செய்தியில், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கையும், திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய மாவட்டங்களில் மஞ்சள் நிற எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை பேரிடர்கள் குறித்து எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவிகளை அண்மையில் அம்மாநில அரசு நிறுவியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

----------

உலகக்கோப்பை இளையோர் துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் Adriyan Karmakar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 50 மீட்டர் ரைபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rutuja Bhosale - தென்கொரியாவின் ‘Sohyun Park இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mrunmayee Deshpande – Prerana Alvekar இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>